### களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

## நெல்லையில் இன்று தொடங்குகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை இன்று (ஏப்ரல் 3ஆம் தேதி) திருநெல்வேலியில் தொடங்குகிறார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் கட்டமாக இன்று திருநெல்வேலியில் பரப்புரையை தொடங்குகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**03.04.2026 (வெள்ளிக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| மாலை 5 மணி | திருநெல்வேலி - பாளையங்கோட்டை (பொதுக்கூட்டம்) | திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, நாங்குநேரி, ராதாபுரம் |

**04.04.2026 (சனிக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | நாகர்கோவில் (பொதுக்கூட்டம்) | கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர் |
| மாலை 5 மணி | சங்கரன்கோயில் (பொதுக்கூட்டம்) | சங்கரன்கோயில், ஆலங்குளம், தென்காசி, வாசுதேவநல்லூர், கடையநல்லூர் |

**05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | விருதுநகர் (பொதுக்கூட்டம்) | சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் |
| மாலை 5 மணி | திருமங்கலம் (பொதுக்கூட்டம்) | மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

### மணலி எஸ்.ஆர்.எப். தொழிற்சாலையில் நடைபெற்ற தொழிற்சங்கத் தேர்தலில்

## தொ.மு.ச. சார்பாக போட்டியிட்ட மு.இராஜகாந்தம் தலைவராக வெற்றி பெற்றுள்ளார்!

சென்னை, ஏப். 3 –

வடசென்னை திருவொற்றியூர் பகுதியில் உள்ள பெரும் பழமை வாய்ந்த மணலி எஸ்.ஆர்.எப். தொழிற்சாலையின் தொழிற்சங்கத் தேர்தல் 31.03.2026 அன்று நடைபெற்றது.



இதில் இரண்டு அணிகள் போட்டியிட்டன. தி.மு.கழக தொழிலாளர் அணியின் மாநில துணைச் செயலாளரும், தொ.மு.ச. பேரவை செயலாளருமான மு.இராஜ காந்தம் தலைமையில் ஒரு அணியும், NDLF தொழிலாளர் ஒருங்கிணைப்பு அணிசார்பாகதோழர் ப.விஜயகுமார் தலைமையிலும் ஒரு அணியும் என இரண்டு அணிகள் சங்கத்தேர்தலில் போடியிட்டனர்.

இதில் தொ.மு.ச. பேரவை சார்பாக போட்டியிட்ட மு.இராஜ காந்தம் தலைமையிலான அணியின் நிர்வாகிகள் முழு வதும் வெற்றி பெற்றுள்ளனர். அதே போல் மொத்தம் உள்ள செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒன்பதில் ஏழு செயற்குழு உறுப்பினர்கள் மு.இராஜகாந்தம் அணியை சார்ந்தவர்கள்தான் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தொழிற்சங்கத் தலைவராக வெற்றிபெற்றுள்ள மு.இராஜ காந்தம், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக வடசென்னை பகுதியில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் தொழிற்சங்க பணிகளை செய்து வந்துள்ளார். மணலி எஸ்.ஆர்.எப். தொழிற்சாலையில் இதற்கு முன்பும் தொழிற்சங்கத் தலைவராக சங்கப்பணி செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றி பெற்ற தொழிற் சங்கத் தலைவர் மு. இராஜகாந்தம் அவர்களுக்கு கழக முன்னணியினரும், பல்வேறு தொழிற்சங்க பிரதிநிதிகளும் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

மேலும் இவர் தி.மு.கழகத்தின் தொழிலாளர் அணியின் மாநில துணை செயலாளராகவும், தொ.மு.ச. பேரவை செயலாளர் பொறுப்பிலும் செயல்பட்டு வருகிறார்.



கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் , மாவட்டக் கழக செயலாளர் இராணிப்பேட்டை ஆர். காந்தி முன்னிலையில், கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசிப்பெற்ற அரக்கோணம் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் எழில் கரோலின் அரக்கோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். இதில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம், குறிஞ்சிப்பாடி கழக அலுவலகத்தில் மாவட்டகழக செயலாளர், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.புவனகிரி சட்டமன்ற கழக வேட்பாளர் துரை.கி.சரவணன், ஆதி திராவிடர் நலக்குழு தலைவர் மருதூர் ஏ.இராமலிங்கம், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி. கதிரவன், மாவட்ட துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து,ஆர்.சக்திவேல், தொகுதி பொறுப்பாளர்கள் டி .ஆர் .கே. விஜயன் , எம் .கே .சிவா, உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர். நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் இணைந்து தீவிர களப்பணியாற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.